நெல்லையப்பர் கோயிலில் 1008 சுமங்கலி பூஜை



கோயிலில் நடைபெற்ற சுமங்கலி பூஜையில் பங்கேற்றோர். (இடது) சிறப்பு அலங்காரத்தில் அம்மன்.

திருநெல்வேலி, ஆக. 21: திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்- காந்திமதியம்மன் திருக்கோயில் வளாகத்தில் 1008 சுமங்கலி பூஜை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஹிந்து ஆலய பாதுகாப்பு குழு, இளைய பாரதம் அமைப்பு ஆகியவற்றின் சார்பில் வரலட்சுமி விரதத்தையொட்டி, கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் இப்பூஜை நடைபெற்றது. இதையொட்டி, நெல்லையப்பர்- காந்திமதியம்மனுக்கு சிறப்பு அலங்காரம், மகா தீபாராதனை ஆகியவை நடைபெற்றன. பூஜையில் பங்கேற்றவர்களுக்கு மஞ்சள் கயிறு, குங்குமம் உள்ளிட்ட பிரசாதம் வழங்கப்பட்டது.

நெல்லையில் செப்.19-இல் தனியார் வேலைவாய்ப்பு முகாம்

திருநெல்வேலி, ஆக. 21: திருநெல்வேலியில் தனியார் துறையின் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் செப். 19-ஆம் தேதி நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆனந்த்மோகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருநெல்வேலி - தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் சார்பில் தனியார் துறையின் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் திருநெல்வேலி வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் செப். 19-ஆம் தேதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில், 5-ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 தேர்ச்சி, பட்டப்படிப்பு, டிப்ளமோ, ஐடிஐ போன்ற கல்வித் தகுதியுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம். 100-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் தங்களுக்கு பணியாளர்களை தேர்வு செய்யவுள்ளனர். வேலைவாய்ப்பு பெறுவோர் பதிவுமூப்பு ரத்து செய்யப்படாது.

சுயவிவரம், கல்விச்சான்று, ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்களுடன் முகாம் நாளில் காலை 9 மணிக்கு நேரில் வர வேண்டும். மேலும், www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் வேலைநாடுநர்களும், வேலைவாய்ப்பளிக்கும் தனியார் நிறுவனங்களும் தங்களது சுயவிவரங்களை பதிவு செய்ய வேண்டும். மேலும், தகவல்களை 'நெல்லை எம்ப்ளாய்மென்ட் ஆஃபிஸ்' என்ற 'டெலிகிராம் சானல்' மூலம் பெறலாம் எனக் கூறியுள்ளார்.

மூத்த குடிமக்கள் பராமரிப்பு, பாதுகாப்பு சட்ட விளக்க விழிப்புணர்வுப் பயிற்சி

திருநெல்வேலி, ஆக. 21: மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் குறித்த ஒரு நாள் விழிப்புணர்வுப் பயிற்சியை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் ஆனந்த்மோகன் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம்-2007 என்பது வயதான பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு அவர்களின் பிள்ளைகள் அல்லது வாரிசுகள் மூலம் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மாதாந்திர நிதி உதவி கிடைப்பதை உறுதி செய்வதாகும். இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்ப்பதற்காகவும், சட்டப்பூர்வ வாரிசுகளிடம் இருந்து மூத்த குடிமக்களுக்கு பராமரிப்புத் தொகையைப் பெறவும், ஒவ்வொரு துணை கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் ஒரு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள், பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

தீர்ப்பாயத்தின் உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் 90 நாள்களுக்குள் தீர்க்கப்படும். மேலும் முதியோர் உதவி எண்ணை 14567 தொடர்பு கொள்ளலாம் என்றார்.

அதைத் தொடர்ந்து, வருவாய் கோட்டாட்சியர் ச. பிரியா, சட்ட சேவைகள் ஆணையத்தைச் சேர்ந்த அ.சண்முக பிரியா, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி முதுமையியல் மருத்துவர் க.செந்தில் ராஜ பெருமாள் அமைப்பு சாரா நிறுவனத்தைச் சேர்ந்த பழனி ஆகியோர் பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்பு, பாதுகாப்பு சட்டங்கள் குறித்து விளக்கி சமூக ரீதியான நடைமுறைகளை மேற்கொள்வது தொடர்பாக பயிற்சி அளித்தனர். மாவட்ட சமூக நல அலுவலர் விஜய மீனா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சி வகுப்பில், 28 முதியோர் இல்லங்களில் இருந்து 2 பணியாளர்கள், மூத்த குடிமக்கள் நலச்சட்டம் குறித்த பணிகள் மேற்கொண்டு வரும் அரசு அலுவலர்கள் என 60 பேர் கலந்து கொண்டனர்.



சட்ட விழிப்புணர்வுப் பயிற்சியை தொடங்கி வைத்துப் பேசிய ஆட்சியர் ஆனந்த் மோகன்.

இண்டியன் வங்கி இந்தியன் வங்கி

தூத்துக்குடி கிளை

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீராக்குதல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (SARFAESI ACT) 2002, 13 (2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

இடம்:தூத்துக்குடி, தேதி: 07.08.2026

அனுப்புநர்: ஸ்ரீ கௌதம் குமார், அதிகாரபூர்வ அலுவலர்/ முதன்மை மேலாளர், இந்தியன் வங்கி, தூத்துக்குடி - 628001.

பெறுநர்: **1. M/s. Alagu Rubber Factory P Ltd.,** (கடன்தாரர்) பிளாட் எண்.C-2B, SIPCOT Industrial Complex, தூத்துக்குடி - 628008.

2. திருமதி.N.அழகம்மாள் (கடன்தாரர்), (Director - M/s. Alagu Rubber Factory P Ltd.,) க/பெ.திரு.**N.**ஸ்ரீனிவாசன், 4/95 F, சுபநிவாஸ், ஆதி பராசக்திநகர், தூத்துக்குடி - 628002.

3. திருமதி.S.சொர்ணகுமாரி (கடன்தாரர்/அடமானதாரர்), (Director - M/s. Alagu Rubber Factory P Ltd.,) க/பெ.லேட். திரு.S.நடராஜன், 4/95 F, சுபநிவாஸ், ஆதி பராசக்திநகர், தூத்துக்குடி - 628002.

ஐயா/அம்மையீர்,

பொருள்: **இந்தியன் வங்கி, தூத்துக்குடி கிளையில் உள்ள தங்கள் Account 6584013056, 6630940546 with Indian Bank Tuticorin Branch-reg கடன் கணக்கு சம்பந்தமாக.**

உங்களில் முதலாமவர் தனிநபர் நிறுவனம், உங்களில் இரண்டாமவர் நிறுவனத்தின் உரிமையாளர். உங்களில் இரண்டாமவர், முதலாமவர் மற்றும் இரண்டாமவர் பெற்ற கடனுக்கு ஈடாக உங்கள் சொத்துக்களை வங்கியிடம் அடமானம் வைத்துள்ள அடமானதாரர்கள் ஆவார்.

உங்களில் முதலாமவர் மற்றும் இரண்டாமவர் கோரிக்கையின் பேரில் வங்கி வணிக நடைமுறைகளுக்கேற்ப பின்வரும் வசதி உங்கள் அனைவருக்கும் ஒப்புதலளித்து வழங்கப்பட்டன.

வசதியின் வகை	தொகை (ரூ.)
SME-MICRO ENT-MFG-MCLR-1Y 6584013056	**20,00,000/-**
SME-SMALL ENT-MFG-MCLR-1Y 6630940546	**19,50,000/-**

முதல் மற்றும் இரண்டாமவர் மேற்கூறிய வசதிகளுக்காக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்கள்.

வசதியின் வகை	ஆவணத்தின் வகை
SME-MICRO ENT-MFG-MCLR-1Y - 6584013056	• D-1 Demand promissory Note - dated 23.11.2017 • D-7 Disposal of proceeds Letter - dated 23.11.2017 • D-101 Agreement of Hypothecation of Movables 23.11.2017 • D-36 Medium Term Loan Agreement – dated 23.11.2017
SME-SMALL ENT-MFG-MCLR-1Y - 6630940546	•D-1 Demand promissory Note - dated 09.05.2018 •D-7 Disposal of proceeds Letter - dated 09.05.2018 •D-101 Agreement of Hypothecation of Movables 09.05.2018 •D-36 Medium Term Loan Agreement – dated 09.05.2018

மேற்கூறிய கடனை திரும்ப செலுத்துவதற்கு இரண்டாமவர் மற்றும் மூன்றாமவர், கீழே குறிப்பிடப்பட்ட உத்தரவாத ஒப்பந்தம் ஒன்றைச் செய்து தனிப்பட்ட முறையில் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

குறிப்பிட்ட கடன் வசதிகளுக்காக, இரண்டாமவர் மற்றும் மூன்றாமவர் பின்வரும் ஆவணங்கள்:

வசதியின் வகை	ஆவணத்தின் வகை
SME-MICRO ENT-SERV-MCLR1Y – 6630940546	•D-57 Agreement of Guarantee – dated 09.05.2018

மேற்படி கடனை திருப்பிச் செலுத்துவற்காக தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி பதிவு மாவட்டம், ஒட்டப்பிடாரம் சார்பதிவு அலுவலகம், ஒட்டப்பிடாரம் வட்டம், வளச்சமுத்திரம் கிராமத்தில் அமைந்துள்ள மூன்றாமவருக்கு சொந்தமான சொத்துகள்: 1)பழைய பட்டா எண் 351 (தற்போதைய புதிய பட்டா எண்:490) கீழ் வரும், ரீ-சர்வே எண்:126/2-ல் அமைந்துள்ள 1.71.5 ஹெக்டேர் (4 ஏக்கர் 24 சென்ட்) 2)பழைய பட்டா எண் 351 (தற்போதைய புதிய பட்டா எண்:490) கீழ் வரும், ரீ-சர்வே எண்:126/4-ல் அமைந்துள்ள 0.05.5 ஹெக்டேர் (14 சென்ட்) அளவீடு கொண்ட சொத்தானது அடமானத்திற்கு உத்திரவாதமாக பெறப்பட்டுள்ளது.

@SME-MICRO ENT-MFG-MCLR-1Y – 6584013056 மற்றும் SME-SMALL ENT-MFG-MCLR-1Y - 6630940546 ஆகிய கடன் வசதிகள் தொடர்பான உங்கள் கடன் பொறுப்பை அவ்வப்போது நீங்கள் ஒப்புக்கொண்டுள்ளீர்கள். 30.06.2025 தேதியின்படி அளிக்கப்பட்ட அத்தகைய கடைசி ஒப்புதல் கடிதம் 31.07.2025 தேதியிட்டதாகும்.

வட்டியுடன் கூடிய நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு பலமுறை கோரப்பட்ட போதிலும், கூட்டு மற்றும் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுள்ள அனைவரும் இத்தொகையைத் திருப்பி செலுத்துவதில் தவறிவிட்டீர்கள். இந்திய ரிசர்வ் வங்கியின் சொத்து வகைப்பாடு தொடர்பான வழிகாட்டுதல்களின்படி, இக்கடன் கணக்கு 31.03.2021 முதல் (Non-Performing Asset) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

06.08.2026 தேதிபடி தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை பின்வருமாறு:

கணக்கு எண்	புத்தக இருப்பு	MOI	MOX	மொத்தம்
6584013056	10,31,691	23,29,779	36,023	33,97,493
6630940546	22,34,827	29,57,086	-	51,91,913
மொத்தம்	**32,66,518**	**52,86,865**	**36,023**	**85,89,406**

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீராக்குதல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி கடன்தாரர் எனும் சொல் வங்கியால் நிதியுதவி வழங்கப்பட்ட எந்தவொரு நபரையோ, ஜாமீன் அளித்தவரையோ, வங்கியால் வழங்கப்பட்ட நிதியுதவிக்கு ஈட்டுறுதியாக அடமானம் அளித்தவரையோ / பிணை அளித்தவரையோ குறிக்கும்.

அதனால் நீங்கள் அனைவரும், ஒவ்வொருவரும் **ரூ.85,89,406/- (ரூபாய் எண்பத்து ஐந்து இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நானூற்று ஆறு மட்டும்)**, 06.08.2026 முதல் அதன்மீது ஒப்பந்தப்படியான வட்டி, மேலும் செலவீனங்கள் / கட்டணங்கள் ஏதேனும் இருப்பின், அவையும் சேர்த்து, சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால் மேற்படி சட்டத்தின்படி மேற்கொண்டு எந்தவித அறிவிப்புமின்றி கடனீட்டுச் சொத்து அமலாக்க உரிமைகளை வங்கி பயன்படுத்த நேரிடும். இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் உங்கள் கடன் நிலுவைகளை முழுமையாக செலுத்த தவறினால் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணைச் சொத்துக்கள் மீது மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4)ன் படி வங்கி தனது அமலாக்க உரிமைகளை பயன்படுத்த நேரிடும்.

இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்கள் முடிவுறும் அன்று நீங்கள் கோரிக்கையை நிறைவேற்ற தவறியிருப்பின் மேற்படி சட்டத்தின்படி தனது உரிமைகளை பயன்படுத்தி சுவாதீனம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13) விதிகளின்படி இந்த அறிவிப்புக்குப் பின் வங்கியின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலின்றி கீழ்காணும் அட்டவணையிலுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது இதர வழிகளில் கைமாற்றம் செய்யத் தடை செய்ப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்க.

SARFAESI சட்டப்பிரிவு 13 உட்பிரிவு 8-ன் படி குறிப்பிடப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் கடனீட்டு சொத்துக்களை மீட்டுக் கொள்ள வேண்டுமென கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

இவ்வறிவிப்பு வங்கிக்கு இருக்கும் வேறெந்தவொரு உரிமைக்கும் பாதகமேற்படாதவாறு உங்களுக்கு அனுப்பப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வறிவிப்பு DRT/DRAT/ நீதிமன்றம் ஆகியவற்றின் DRT/RO முன்னிலையில் நிலுவையிலிருக்கும் வழக்குகளை தொடர்வதற்கும் ஏற்கனவே பெற்ற / இனி பெறப்போகும் துணை / தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கும் வங்கிக்கு இருக்கும் உரிமைகளை பாதிக்காதவாறு வெளியிடப்படுகிறது.

தள்ளுபடி செய்யப்பட்ட நிலுவை ரசீதுகள், உங்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வங்கி ஜாமீன்கள் மற்றும் கடன் உறுதிக்கடிதங்கள் முதலான இதர எதிர்பாராப் பொருப்புகளின்படி உங்கள் பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்றுமாறு உங்களுக்கு அழைப்புவிடுக்க வங்கிக்கு உரிமை உண்டு என்பதைக் கவனத்தில் கொள்க.

கீழே கையொப்பமிட்டுள்ளவர் இந்த அறிவிப்பை வெளியிடவும் மேற்படி சட்டப்பிரிவு 13-ன் படி அதிகாரங்களை செயல்படுத்தவும் உரிமையுள்ள வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலர் ஆவார்.

அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள்:

1)ஒட்டப்பிடாரம் தாலுகா, ஒட்டப்பிடாரம் வட்டம், வளச்சமுத்திரம் கிராம, ரீ-சர்வே எண்:126/2-ல் அமைந்துள்ள பழைய பட்டா எண் 351 (தற்போதைய புதிய பட்டா எண்:490) கீழ் வரும், ரீ-சர்வே எண்:126/2-ல் அமைந்துள்ள 1.71.5 ஹெக்டேர் (4 ஏக்கர் 24 சென்ட்) 2) ஒட்டப்பிடாரம் தாலுகா, ஒட்டப்பிடாரம் வட்டம், வளச்சமுத்திரம் கிராம், ரீ-சர்வே எண்:126/4-ல் பழைய பட்டா எண் 351 (தற்போதைய புதிய பட்டா எண்:490) கீழ் வரும், 0.05.5 ஹெக்டேர் (14 சென்ட்) ஆகிய சொத்துக்கள் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி பதிவு மாவட்டம், ஒட்டப்பிடாரம் சார்பதிவு அலுவலகம், ஒட்டப்பிடாரம் வட்டம், வளச்சமுத்திரம் கிராமத்தில் அமைந்துள்ளன.

எல்லைகள்: வடக்கு: செல்லம்மாள் புஞ்சை, **தெற்கு:** வெங்கடசாமி நாயக்கர் புஞ்சை, **கிழக்கு:** கார்ட் ட்ராக் மற்றும் போத்த நாயக்கர் புஞ்சை, **மேற்கு:** கஸ்தூரி அம்மாள் புஞ்சை.

மொத்தம் 4 ஏக்கர் 38 சென்ட் நிலப்பரப்பு கொண்ட முதலாமவருக்கும் இரண்டாமவருக்கும் இடையே பிரித்துச் செல்லும் வகையில், 61.8 மீட்டர் நீளமும் 6.8 மீட்டர் அகலமும் கொண்ட கார்ட் ட்ராக் பாதை வழியாக பகுதிகளையும் அணுகும் வசதியுள்ளது.

தேதி: 20.08.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: தூத்துக்குடி இந்தியன் வங்கி

'செப்.1-இல் மேக்கேதாட்டு நோக்கி தமஜக நடைப்பயணம்'

திருநெல்வேலி, ஆக. 21: மேக்கேதாட்டுவில் அணை கட்டக்கூடாது என வலியுறுத்தி, தமிழக மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் அப்பகுதி நோக்கி நடைப்பயணம் மேற்கொள்ளப்படும் என்றார் அக்கட்சியின் மாநிலத் தலைவர் கே. எம். சரீப்.

இதுதொடர்பாக, திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் வெளிக்கிழமை கூறியதாவது:

கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டு அணையை கட்ட முயற்சி செய்கிறது. அங்கு அணை கட்டினால் தமிழகம் பாலைவனம் ஆகிவிடும். எனவே, மேக்கேதாட்டு அணை கட்டுவதற்கும், காவிரியில் உரிய நீர்பகிர்வை தர மறுப்பதற்கும், அம்மாநிலத்தின் சாம்ராஜ்நகர் வனப் பகுதியில் 3 அப்பாவி தமிழர்கள் சுட்டு கொல்லப்பட்டதற்கும் கர்நாடக அரசுக்கு கண்டனம் தெரிவித்து செப். 1 ஆம் தேதி காலை 10 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் இருந்து மேக்கேதாட்டு பகுதியை நோக்கி தமிழக மக்கள் ஜனநாயக கட்சி நடைப்பயணம் மேற்கொள்கிறது.

இதில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சமூக ஆர்வலர்கள் பங்கேற்க உள்ளனர்.

இதன் மூலம் தமிழக மக்களை ஓரணியில் திரட்டி, தமிழக நலனுக்கு எதிராக செயல்படும் கர்நாடக அரசு குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். எங்களது நடை பயணத்திற்கு தமிழக அரசு ஆதரவு அளிக்க வேண்டும்.

முல்லைப் பெரியாறு விவகாரத்தில் கேரள அரசும், காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசும் தமிழகத்துக்கு எதிராக செயல்படுகின்றன.

முதல்வர் விஜய் கனிம வளங்களை 3 மாதங்கள் வெளி மாநிலங்களுக்கு கொண்டுசெல்ல தடை விதித்துள்ளது வரவேற்கத்தக்கது. இதேபோல், கேரளத்துக்கு கொண்டுசெல்லப்படும் காய்கனிகள் உள்ளிட்டவற்றையும் தமிழக அரசு தடுத்து நிறுத்தினால், முல்லை பெரியாறு பிரச்னையில் நமக்கு நியாயம் கிடைக்கும். பெங்களூரில் இருந்து ஓசூர் பகுதிக்கு கொண்டுவரப்படும் எலக்ட்ரானிக் குப்பைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் அவர்.

சுந்தரனார் பல்கலை.யில் உலக புகைப்பட தின கண்காட்சி



கண்காட்சியைத் தொடங்கி வைத்து பார்வையிட்ட பதிவாளர் (பொ) கு.அண்ணாதுரை.

திருநெல்வேலி, ஆக. 21: உலக புகைப்பட தினத்தை முன்னிட்டு, திருநெல்வேலி அபிஷேகப்பட்டியில் உள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் புகைப்படக் கண்காட்சி மற்றும் டிஜிட்டல் புகைப்பட கலை பயிலரங்கம் அண்மையில் நடைபெற்றது.

அப்பல்கலைக்கழகத்தின் தொடர்பியல் துறை, மனோ மீடியா கிளப் ஆகியவற்றின் சார்பில் 'ஸ்நாப்ஷாட் 2026' என்ற தலைப்பில் நடைபெற்ற இக்கண்காட்சி - பயிலரங்கை, பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) கு. அண்ணாதுரை தொடங்கி வைத்தார்.

இப்பயிலரங்கில் ஸ்ரீராம், ஏ.எம். தங்க தமிழரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதிநவீன புகைப்படக் கருவிகளைத் திறம்படக் கையாளுதல், ஒளி மற்றும் காட்சியமைப்பைப் பயன்படுத்துதல், ஆக்கப்பூர்வமான பார்வையை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் தொழில்முறை புகைப்படத் துறையில் தேவையான நடைமுறைத் திறன்களைப் பெறுதல் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

SBI | பாரத ஸ்டேட் வங்கி
குழித்துறை கிளை
எண்.3/33, பி.டி.கே பில்டிங், மார்த்தாண்டம், கன்னியாகுமரி-629165

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடன்தாரரின் பெயர்	ஸ்ரீ. I. ராதா கிருஷ்ணன்
வாகன பதிவு எண்	TN 75 BH 2664 (Without RC)
தயாரிப்பு / மாடல்	RENAULT KIGER RXT (O) AMT/2025
வாகனம் நிற்கும் இடம்	குழித்துறை
குறைந்தபட்ச விலை	Rs.5,50,000/-
டேவணித் தொகை	Rs. 55,000/-

விற்பனை விபரம்

மின்னணு ஏல விற்பனை நடைபெறும் நாள் & நேரம்	02.09.2026, 11.00 am முதல் 12.00 noon வரை
டேவணித் தொகை செலுத்தும் முறை	State Bank of India, Kuzhithurai Branch என்ற பெயரில் எடுக்கப்பட்ட "டிமாண்ட் டிராப்ட்" மூலமாக டேவணித் தொகையை செலுத்த வேண்டும்.
விலை குறிப்பிடுத் தொகையை உயர்த்திக் கோரும் தொகை	ரூ. 1,000/-
வாகனத்தை பார்வையிடும் தேதி	22-08-2026 to 01-09-2026
ஆன்லைனில் டேவணித் தொகையுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	01-09-2026, 4.00 pm வரை

மேலும் இதர விபரங்களை அறிய விரும்பும் இதர குறியீட்டாளர்கள், கிளை மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, எண்.3/33, பி.டி.கே பில்டிங்,மார்த்தாண்டம், கன்னியாகுமரி - 629165 போன்: **93441 71134, 93429 56932** என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவர்களான **M/s. C1 India Pvt Ltd., Mr. M.Prabakaran : +91-7418281709 or Through https://bankeauctions.com, tn@c1india.com, support@bankeauctions.com** அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 21.08.2026 அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்: குழித்துறை பாரத ஸ்டேட் வங்கி, குழித்துறை

VEHICLE FOR SALE

REG NO.	VEHICLE DETAILS	MODEL
TN72BH-3763	TATA LPK 1618 FBT	2017

CONTACT NO.
7904846450 & 9789146502

VEHICLE FOR SALE

REG NO.	VEHICLE DETAILS	MODEL
TN75AX-6608	AL 4825 BS6 FBT-T	2023

CONTACT NO.
8870414129



கம்ப்யூட்டர் முறையில் கண்கள் பரிசோதனை செய்யப்படும்.
கண் கண்ணாடிகளுக்கு
பிரைட்
ஆப்டிக்கல்ஸ்
அண்ணா ஸ்டேடியம் அருகில், 36/A, பாலமோர் ரோடு, நாகர்கோவில். போன்:228605.

CHANGE OF NAME

I, **SEENIVASAN GOVINDARAJ** born on 10/05/1967 (Native District: Tirunelveli) residing at No: 105/1A, Ashok Nagar, Arigar Anna Street, Kovilpatti Po, Kovilpatti Tk, Thoothukudi Dt - 628501. Tamilnadu, Shall hence forth be known as **GOVINDARAJ SRINIVASAN SEENIVASAN GOVINDARAJ**
Thoothukudi 13 August, 2026

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.09.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கன்னியாகுமரி, பீச் ரோடு நாகர்கோயில், 0125250810050319, 0549, கோட்டார் நாகர்கோயில், 0102490810757863, 7865, 7883, 7887, 0163, 0165, குழித்துரை, 0102890820000211, 0213, 0229, மணலிவிளை அருமனை , 0129360810044898, 4899, 0155, மார்த்தாண்டம், 0126900720000313, 2812, 2859, 0288, என் எம் ரோடு மார்த்தாண்டம், 0102810810046263, 0174, 0180, 0181, சாமியார் மடம், 0103140810058083, 8087, வடசேரி ஜங்ஷன், 0102980810071237, 0146, 0148, ஆலங்குளம், 0102410720000315, அம்பாசமுத்திரம், 0103330810834811, 4816, தென்காசி, 0104530810760557, 0179, 0183, தூத்துக்குடி, ஜீவல்லரி பஜார் தூத்துக்குடி, 0132330820000162, சாத்தான்குளம், 0133240810057018, 7020, 0157, 0160, தூத்துக்குடி, 0104660710069825, 9606, 9612, 9626, 0377, திருநெல்வேலி, கடயம் திருநெல்வேலி, 0130750820000246, கடயநல்லூர், 0124390810032052, 0120, கலக்காடு திருநெல்வேலி, 0126650820000153, மேலகரம் திருநெல்வேலி, 0121630710037020, 7069, பாளயங்கோட்டை, 0136220810014131, 4137, 4154, 4165, 0200, 0224, ஸ்ரீபுரம் திருநெல்வேலி, 0120380810044716, 0254, 0260, திருநெல்வேலி, 0103290710796866, 6959, தூத்துக்குடி, காமராஜ் சாலை திருச்செந்தூர், 0118490710077792, 7731, 8029, 0204, 0206, கயத்தாறு தூத்துக்குடி, 0115020710057886, 0238, நஸரத், 0102940810765983, 5991, 6208.

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

தெற்கு இரயில்வே

பொருட்கள் மேலாண்மை துறை
ஏல நிகழ்ச்சி நிரல் – செப்டெம்பர் – 2026
அறிவிப்பு எண். 09 / 2026

ஃபெர்ரஸ் ஸ்க்ராப், ஃபெர்ரஸ் அல்லாத ஸ்க்ராப், பிற பல்வகை ஸ்க்ராப்கள், கழித்துக் கட்டப்பட்ட வேகன், பயணப்பெட்டிகள் மற்றும் லோகோக்கள், ஸ்க்ராப் ரெயில்கள் மற்றும் பிற நிரந்தர வழி ஸ்க்ராப் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக மின்னணு ஏலம் நடத்தப்படும்.

வ. எண்	மின்னணு ஏலத்தை நடத்துபவர்	செப்டெம்பர் 2026 மாதத்தின் ஏல தேதிகள்			ஏலத்துக்கான பொருட்கள்
1	GSD/ பெரம்பூர்	02/09/26	15/09/26	28/09/26	மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள், www.ireps.gov.in இணைய தளத்தில் உள்ள ஏலப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.
2	CSSD/ பொன்மலை	03/09/26	16/09/26	24/09/26	
3	SSD/ பொத்தனூர்	04/09/26	11/09/26	21/09/26	
4	MAS கோட்டம்	09/09/26	16/09/26	23/09